**சுருக்கம்**

திட்டங்கள்– மாநிலத் திட்டம் – கலைஞர் வீடு வழங்கும் திட்டம் 2010–2011 நிலை–II (Phase II) – மூன்று இலட்சம் பயனாளிகளை நடப்பாண்டிலேயே தேர்ந்தெடுத்து திட்டத்தினைச் செயல்படுத்துதல் – நிருவாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1) துறை

அரசு ஆணை (நிலை) எண். 6 நாள் : 11.01.2011

படிக்கப்பட்டவை :

1) அரசாணை (நிலை) எண்.68, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 14.6.2010.
2) அரசாணை (நிலை) எண்.74, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.7.2010.
3) அரசாணை (நிலை) எண்.87, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 20.08.2010.
4) அரசாணை (நிலை) எண்.96, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 01.10.2010.
5) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.95183/2010/KHS, நாள் 23.11.2010.

*****

**ஆணை :**

முதலாவது மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஊரகப் பகுதிகளில் தகுதியுள்ள ஓலைக் கூரை வேயப்பட்ட அனைத்துக் குடிசைகளையும் கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய நிலையான வீடுகளாக மாற்ற ‘கலைஞர் வீடு வழங்கும் திட்டம்’ எனும் ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கி செயல்படுத்தவும், வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மற்றும் 2010–11 திட்ட மதிப்பீடுகளில் உள்ள ஒதுக்கீடு ஆகியவற்றின்படி நடப்பு ஆண்டில் (2010-11) மூன்று இலட்சம் குடிசை வீடுகளை கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய நிலையான வீடுகளாக மாற்ற வீடு ஒன்றிற்கு ரூ.75,000/- வீதம் (unit cost) ரூ.2,250 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

2) மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் குடிசைகளை நிலையான வீடுகளாக மாற்ற 22 இலட்சம் ஓலைக் குடிசைகள் கணக்கெடுக்கப்பட்டது எனவும், அதில் பல்வேறு காரணங்களால் 4.75 இலட்சம் குடிசைகள் தகுதி நீக்கம் செய்யப்பட்டன எனவும், எஞ்சிய 17.25 இலட்சம் குடிசைகளில் 13.3 இலட்சம் குடிசைகள் ‘தகுதியுடையது’ எனவும் 3.95 இலட்சம் குடிசைகள் ‘நிபந்தனையுடன் தகுதியுடையது’ எனவும், தகுதியுள்ள குடிசைகளிருந்து நடப்பு ஆண்டில் 3 இலட்சம் குடிசைகளை கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய நிலையான வீடுகளாக மாற்றுவதற்கு ஆகஸ்ட் 2010-ல் பணி ஆணைகள் வழங்கப்பட்டன எனவும், ‘நிபந்தனையுடன் தகுதியுள்ள’ ஓலைக்குடிசைகளை ‘தகுதியுள்ள’ ஓலைக்குடிசைகளாக மாற்ற தக்க நடவடிக்கைகள் தனியே எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

3) மேலும், நடப்பாண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட 3 இலட்சம் குடிசை வீடுகளில், எதிர்வரும் மார்ச் திங்கள் 2011-க்குள் 2,46,000 குடிசைகள் (82 சதவீதம்) அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு நிலையான வீடுகளாக மாற்றப்பட்டுவிடும் எனவும், எஞ்சிய 54,000 குடிசை வீடுகளில் 50 சதவீதப் பணிகள் மார்ச் திங்கள் 2011-க்குள் முடிக்கப்படும் எனவும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் எடுத்துச் செய்யப்படும் முக்கிய கட்டுமானப் பணிகள், வடகிழக்குப் பருவமழை மற்றும் வேளாண் செயல்பாடுகள் ஆகியவை சனவரி திங்கள் 2011-க்குள் முடிவடைய உள்ளதால், வீட்டின் கட்டுமானப் பணிகளுக்குத் தேவைப்படும் மனித ஆற்றல், செங்கற்கள், மணல் போன்ற பொருட்கள் மிகக் குறைந்த விலையில் எளிதாகக் கிடைக்கும் என்றும், அதன் காரணமாக நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட 3 இலட்சம் குடிசை வீடுகளை தவிர்த்து கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்ட செயலாக்கத்திற்காக 'கலைஞர் வீடு வழங்கும் திட்டம் 2010-11 - நிலை II'-ன் கீழ் ஏற்கனவே கணக்கெடுக்கப்பட்ட குடிசைகளில் தகுதியுள்ள 3 இலட்சம் ஓலைக் குடிசைகளை நிலையான வீடுகளாக கட்டித் தருவதற்கு பயனாளிகளுக்கு நடப்பு ஆண்டில் பின்பற்றப்பட்டு வரும் வழிகாட்டு நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு பணி ஆணைகள் சனவரி திங்கள் 2011-ல் வழங்கலாம் எனவும், அவ்வீடுகள் அக்டோபர் திங்கள் 2011 (அதாவது நடப்பு நிதி ஆண்டில் 3 மாதங்கள், அடுத்த நிதி ஆண்டில் 7 மாதங்கள் ஆக மொத்தம் 10 மாதங்களில்)-க்குள் கட்டி முடிக்கப்படும் எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4) இதுதவிர, 2010-11-ஆம் நிதியாண்டில் கலைஞர் வீடு வழங்கும் திட்ட நிர்வாகச் செலவுக்கு மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் நிதி விடுவித்தது போல், தற்போது இரண்டாம் கட்டமாக நடப்பாண்டிலேயே பணிகள் எடுத்துக் கொள்ளப்படுவதால் 'கலைஞர் வீடு வழங்கும் திட்டம் 2010-11- நிலை II'-க்கு நிர்வாகச் செலவிற்காக ரூ.6.67 கோடியும், அதன் திட்டப் பணிகளை செயல்படுத்த ரூ.447.00 கோடியும், ஆக மொத்தம் ரூ.453.67 கோடி நிதியை நடப்பாண்டிலேயே வழங்குமாறும், 'கலைஞர் வீடு வழங்கும் திட்டம் 2010-11-நிலை I' மற்றும் 'கலைஞர் வீடு வழங்கும் திட்டம் 2010-11-நிலை II'-களின் எஞ்சிய பணிகளை அடுத்த நிதியாண்டில் (2011–2012) மேற்கொள்ள ரூ.1803.51 கோடி நிதியை வழங்குமாறும், அதில் முன்னளி மான்ய வாக்கெடுப்பு மூலம் (Vote on Account) ரூ.900.00 கோடி வழங்குமாறும் தெரிவித்து அவைகளின்மீது ஆணைகளை வெளியிடுமாறு அரசினை வேண்டியுள்ளார்.

5) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்றுக்கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே கீழ்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

(i) கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக செயல்படுத்தப்பட வேண்டிய மூன்று இலட்சம் குடிசை வீடுகளை கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய நிலையான வீடுகள் கட்டும் பணியை "கலைஞர் வீடு வழங்கும் திட்டம் 2010–11 - நிலை II (Phase II)"- ன்கீழ் மேற்கொள்ள அனுமதியளிக்கப்படுகிறது.

(ii) 'கலைஞர் வீடு வழங்கும் திட்டம் 2010-11 – நிலை II (Phase II)'-ன் கீழ் தற்பொழுது நடைமுறையிலுள்ள திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்கனவே கணக்கெடுக்கப்பட்ட தகுதியுடைவர்களில் மூன்று இலட்சம் பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பணி ஆணைகளை சனவரி திங்கள்' 2011-ல் வழங்கப்பட வேண்டும்.

(iii) 'கலைஞர் வீடு வழங்கும் திட்டம் **2010–11**- நிலை II'– யினை செயல்படுத்த நடப்பு ஆண்டில் **(2010-11)** ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாக **ரூ.447,00,00,000/-** (ரூபாய் நானூற்று நாற்பத்து ஏழு கோடி மட்டும்) (**ரூ.453.67** கோடி - **ரூ.6.67** கோடி) க்கு நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(iv) 'கலைஞர் வீடு வழங்கும் திட்டம் **2010-11**–நிலைII-'ன்கீழ், ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்டதைப் போன்று பின்வரும் பதிவேடுகளை வழங்கவும் மற்றும் தகவல் பலகைகளை நிறுவவும் அனுமதியளித்து அதற்குத் தேவையான **ரூ.6,66,80,000/–**யை (ரூபாய் ஆறு கோடியே அறுபத்து ஆறு இலட்சத்து எண்பது ஆயிரம் மட்டும்) நடப்பாண்டில் **(2010–2011)** கீழ்கண்டவாறு நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ) | **24,000** பதிவேடுகளை தலா **ரூ.70/-** செலவில் அச்சிட்டு வழங்குதல் | – ரூ. **16,80,000/-** |
| ஆ) | **3** இலட்சம் அளவுப் புத்தகங்களை தலா **ரூ.50/-** செலவில் அச்சிட்டு வழங்குதல் | – ரூ. **1,50,00,000/-** |
| இ) | **20,000** தகவல் பலகைகளை தலா **ரூ.2,500/–** செலவில் நிறுவதல் | –ரூ. **5,00,00,000/-** |
| | **மொத்தம்** | **–ரூ. 6,66,80,000/–** |

(v) 'கலைஞர் வீடு வழங்கும் திட்டம் **2010–11** நிலை I மற்றும் நிலை II'–களின் எஞ்சிய பணிகளை அடுத்த நிதியாண்டில் **(2011-12)** செயல்படுத்த **ரூ.1,803,00,00,000/-** (ரூபாய் ஓராயிரத்து எண்ணூற்று மூன்று கோடி மட்டும்)க்கு நிருவாக ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. அதில் உடனடி தேவையான **ரூ.900,00,00,000/-** (ரூபாய் தொள்ளாயிரம் கோடி மட்டும்) **2011-12** ஆம் ஆண்டு முன்னளி மான்ய வாக்கெடுப்பில் (Vote on Account) சேர்க்கப்பட்டு சட்டப் பேரவையின் ஒப்புதலுக்கு பிறகு மேற்கொள்ளப்படும்.

(vi) மேலும், 'கலைஞர் வீடு வழங்கும் திட்டம் **2010–11** நிலை II'–ன் கீழ் கணினி பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் எழுது பொருட்கள் (supply of computer consumables and stationeries) ஆகிய நிர்வாகச் செலவுகளை அடுத்த நிதியாண்டில் **(2011–12)** மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகத்திற்கு மாதம் **ரூ.5,000/-** வீதமும், **31** மாவட்ட ஊராட்சி முகமைகள் மற்றும் **385** ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாதம் **ரூ.1,000** வீதமும் ஆகமொத்தம் **ரூ.50,52,000/–**க்கு (ரூபாய் ஐம்பது இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரம் மட்டும்) நிர்வாக ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

**6)** மேலே பத்தி 5 (iii) மற்றும் (iv)-ல் நிர்வாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை **ரூ.453,66,80,000/-** (ரூபாய் நானூற்று ஐம்பத்து மூன்று கோடியே அறுபத்தாறு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) கீழ்காணும் தலைப்பில் பற்று வைக்கப்படும்.

(ரூபாயில்)

| | |
|---|---|
| **4216** – வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு – **03** – ஊரக வீட்டு வசதி **800** – ஏனைய செலவு பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் JA - கலைஞர் வீட்டு வசதித் திட்டம் **16** – பெரும் பணிகள் (**து.தொ.கு.4216-03-800-JA-1601**) | **ரூ.453,66,80,000** |

7) மேலே பத்தி 5 (v) மற்றும் (vi)-ல் நிர்வாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ.1803,50,52,000/- (ரூபாய் ஓராயிரத்து எண்ணூற்று மூன்று கோடியே ஐம்பது இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரம் மட்டும்) 2011-12-ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

(ரூபாயில்)

| | | |
|---|---|---|
| (i) | 4216 – வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு – 03 – ஊரக வீட்டு வசதி 789 – ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் JA சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் கலைஞர் வீட்டு வசதித் திட்டம்.<br>16 – பெரும் பணிகள் (த.தொ.கு.4216-03-789-JA-1607) | ரூ. 392,00,00,000 |
| (ii) | 4216 – வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு - 03 ஊரக வீட்டு வசதி 796 – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் JA – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டத்தின்கீழ் கலைஞர் வீட்டு வசதித் திட்டம்.<br>16 – பெரும் பணிகள் (த.தொ.கு.4216-03-796-JA-1602) | ரூ. 60,00,00,000 |
| (iii) | 4216 – வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு – 03 ஊரக வீட்டு வசதி 800 – ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் JA – கலைஞர் வீட்டு வசதித் திட்டம்.<br>16 – பெரும் பணிகள் (த.தொ.கு.4216-03-800-JA-1601) | ரூ. 1351,50,52,000 |
| | மொத்தம் | ரூ.1803,50,52,000 |

8) மேலே பத்தி 5 (iii) மற்றும் (iv)-ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகைக்கான நிதி 2010-11-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இதனை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அனுமதிக்கப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2010-11-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளத் தேவையான கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதித் துறைக்கு அனுப்புமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9) இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.3139/FS/P/2010, நாள் 10.01.2011-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1769 (ஆயிரத்து எழுநூற்று அறுபத்து ஒன்பது)

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை -15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.
**நகல்**
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஊவ/ வரவு செலவு பொது I/II/வரவு-செலவு ஒருங்கிணைப்பு) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.